# இந்திய உதவி உயர்ஸ்தானிகராலயம்
# கண்டி

**இலங்கைப் பிரஜைகளுக்காக இந்திய அரசினால் முழுமையாக நிதியளிக்கப்பட்ட புலமைப்பரிசில்கள்.**

கண்டியிலுள்ள இந்திய உதவி உயர்ஸ்தானிகராலயமானது முழுமையாக நிதியளிக்கப்பட்ட 200 புலமைப்பரிசில்களுக்கு பல்வேறு மட்டங்களையும் சேர்ந்த இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்களை கோரியுள்ளது. இந்திய முன்னணி நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களில் பல்வேறுபட்ட துறைகளிலும் கல்வி பயில்வதற்காக இப் புலமைப்பரிசில்கள் வழங்கப்படுகின்றன. ஆனாலும் இப் புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் மருத்துவம் /துணை மருத்துவம், நவநாகரீக வடிவமைப்பு, மற்றும் சட்டத் துறை சார்ந்த கற்கைகள் உள்ளடக்கப்படாது. இலங்கை பிரஜைகளுக்கென பிரத்தியேகமாக வழங்கப்படும் இப் புலமைப்பரிசில்கள் 2025/26 கல்வியாண்டுக்கானவையாகும் .

2. இத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் புலமைப்பரிசில்கள் பின்வருமாறு:

**அ) நேரு ஞாபகார்த்த புலமைப்பரிசில் திட்டம்:** இத் திட்டமானது பொறியியல், விஞ்ஞானம், வணிகம், பொருளாதாரம், வர்த்தகம் மானுடவியல் மற்றும் கலை உள்ளடங்கலாக பல்வேறுபட்ட கற்கைநெறிகளில் இளமாணி பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு மற்றும் முனைவர் பட்டப்படிப்பு என்பவற்றை உள்ளடக்குகிறது.

**ஆ) மௌலானா ஆசாத் புலமைப்பரிசில் திட்டம்:** பொறியியல், விஞ்ஞானம், மற்றும் விவசாயம் ஆகிய துறைகளில் முதுமாணி பட்டப்படிப்பினை உள்ளடக்குகிறது.

**இ) ராஜிவ் காந்தி புலமைப்பரிசில் திட்டம்:** பொறியியல் இளமாணி மற்றும் தொழிநுட்பவியல் இளமாணி பட்டப்படிப்புகளுக்கு வழியமைக்கக் கூடிய தகவல் தொழிநுட்பத்துறையில் இளமாணி பட்டப்படிப்பு கற்கைநெறிகளை உள்ளடக்குகிறது.

**ஈ) டாக்டர் ஏ.பி.ஜே அப்துல் கலாம் பொதுநலவாய புலமைப்பரிசில் திட்டம்:** இத் திட்டமானது பொறியியல், விஞ்ஞானம், வணிகம், பொருளாதாரம், வர்த்தகம் மானுடவியல் மற்றும் கலை உள்ளடங்கலாக பல்வேறுபட்ட கற்கை நெறிகளில் இளமாணி பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு மற்றும் முனைவர் பட்டப்படிப்பு என்பவற்றை உள்ளடக்குகிறது.

3. மேற்குறிப்பிடப்பட்ட திட்டங்கள் ஒவ்வொன்றும், பாடநெறியின் முழு காலத்திற்குமான கல்விக் கட்டணம், மாதாந்த வாழ்வாதார கொடுப்பனவு மற்றும் புத்தகங்கள், காகிதாதிகளுக்கான வருடாந்த கொடுப்பனவு ஆகியவற்றை உள்ளடக்குகிறது. மேலும் இந்தியாவிற்கான விமானக்கட்டணம் வழங்கப்படும் என்பதுடன் நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு கல்விச் சுற்றுலாக்களை மேற்கொள்வதற்கான வருடாந்த கொடுப்பனவும் வழங்கப்படும். மேலும் தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு குறித்த பல்கலைக்கழக வளாகத்திற்குள் விடுதி வசதியும் செய்து கொடுக்கப்படும்.

4. இந்த புலமைப்பரிசில்களை வழங்குவதற்காக இந்திய அரசு தகுதிவாய்ந்த இலங்கையர்களைத் தெரிவு செய்கிறது. இத் தேர்வு நடைமுறையானது இலங்கை அரசின் கல்வி அமைச்சுடனான கலந்தாலோசனையுடன் மேற்கொள்ளப்படுகிறது. இது தொடர்பான மேலதிக தகவல்களை கல்வி அமைச்சினது www.mohe.gov.lk எனும் இணையதள முகவரியினூடாக பெற்றுக்கொள்ளலாம். ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள் மற்றும் அவர்களது பெற்றோர்கள் இக் கற்கை நெறிகளுக்கான தகைமைகள் மற்றும் தேர்வு நடைமுறை பற்றி மேலும் அறிந்து கொள்ளும் பொருட்டு கண்டியில் உள்ள இந்திய உதவி உயர்ஸ்தானிகராலயத்தினை (ice.kandy@mea.gov.in) / தொலைபேசி எண். 0812222652 அல்லது இலங்கை அரசின் கல்வி அமைச்சினை அணுகுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.